

உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி நேற்று முன்தினம் (24.03.2025) சென்னை, புரசைவாக்கத்தில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் அமுதம் நியாய விலைக் கடையில் விற்பனை முனையம் மற்றும் எடை தராசு இணைத்தல் தொடர்பாக நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்நிகழ்வின் போது உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை இயக்குநர் த. மோகன், மற்றும் உணவு பொருள் வழங்கல் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



ஈரோடு மாவட்டத்தில் தெரு நாய்கள் கடித்து ஆடு மற்றும் கோழி உயிரிழந்ததை அடுத்து விவசாயப் பெருமக்கள் பெரிதும் பாதிப்பு அடைந்தனர். விவசாயிகளின் கோரிக்கையை ஏற்று தமிழ்நாடு முதலமைச்சர் – கழக தலைவர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் இறந்த ஆடு மற்றும் கோழிகளுக்கு இழப்பீட்டுத் தொகையை வழங்குமாறு உத்தரவிட்டிருந்தார். அதனை தொடர்ந்து ஈரோடு மாவட்ட விவசாய சங்கத்தின் சார்பாக இழப்பீட்டுத் தொகை வழங்கிய தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை அமைச்சர் சு.முத்துசாமிக்கும் நன்றியையும் பாராட்டுகளையும் தெரிவித்தனர். நிகழ்வில் ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி.சந்திரகுமார், மாவட்ட துணை செயலாளர் ஆ.செந்தில்குமார், சென்னிமலை ஒன்றிய செயலாளர் செங்கோட்டையன் உள்ளிட்ட விவசாய சங்க பிரதிநிதிகள், விவசாயிகள் பலர் உள்ளனர்.

பணியாற்றும் பெண்களுக்கு பாதுகாப்புக் கொடுக்கும் வகையில் - பல்லாயிரக்கணக்கானோர் தங்கும் வகையில்

# ரூ.708 கோடியில் விடுதி கட்டிக் கொடுத்தவர் முதல்வர்!

## சட்டப் பேரவையில் அமைச்சர் சி.வி.கணேசன் பெருமிதம்!



சென்னை, மார்ச். 26-

சட்டப் பேரவையில் அ.தி.மு.க. உறுப்பினர் பி. தங்கமணி பேசும்போது குறுக்கிட்டுப் பேசிய அமைச்சர் சி.வி.கணேசன், ‘பணியாற்றும் பெண்களுக்கு பாதுகாப்புக் கொடுக்கும் வகையில், பல்லாயிரக்கணக் கானோர் தங்கும் வகையில், ரூ.708 கோடியில் விடுதி கட்டி கொடுத்த இந்தியாவி லேயே ஒரே முதல்வர் நம் தமிழ்நாட்டு முதல்வர் என்று பெருமிதத்துடன் குறிப்பிட் டார்.

இதுகுறித்து சட்டப் பேரவையில் அமைச்சர் சி.வி. கணேசன் தெரிவித்ததாவது:-

உற்பத்தி செய்யக்கூடிய துறைகளில் தொழில் துறை அமைச்சர் அவர்கள் சொன்னது போன்று, 43 சதவிகிதப் பெண்கள் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அதைவிட மிக முக்கியமான விஷயம் என்னவென்றால், பெண்களுக்கு பாதுகாப்புக் கொடுக்க வேண்டும் என்பதற்காகத்தான் Foxconn நிறுவனத்திற்கு அருகாமையில் 708 கோடி ரூபாய் மதிப்பீட்டில், பல்லாயிரக்கணக்கான பெண்கள் தங்கக்கூடிய விடுதியைக் கட்டிக் கொடுத்துள்ள ஒரே முதலமைச்சர் இந்திய அளவில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள்தான் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இவ்வாறு அமைச்சர் தெரிவித்தார்.

விக்கிரவாண்டி பகுதியில்

# வெடி விபத்தில் உயிரிழந்த சிறுமியின் குடும்பத்திற்கு நிதியுதவி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

**சென்னை, மார்ச் 26-**

**விழுப்புரம் மாவட்டம், விக்கிரவாண்டி வட்டம், திருக்குணம் மதுரா கொசப்பாளையம் கிராமத்தில் பாறையை வெடி வைத்து தகர்த்தபோது சிதறிய கருங்கல் தலையில் விழுந்ததில் உயிரிழந்த சிறுமியின் பெற்றோருக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவி வழங்கி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.**

விழுப்புரம் மாவட்டம், விக்கிர வாண்டி வட்டம், திருக்குணம் மதுரா கொசப்பாளையம் கிராமத்தில் நடைபெற்ற வாய்க்கால் பராமரிப்புப் பணியின்போது வாய்க்கால் நடுவிலிருந்த பாறையை அகற்றும் பொருட்டு 23.3.2025 அன்று மாலை அப்பாறையை வெடிவைத்து தகர்த்தபோது சிதறிய கருங்கல் எதிர்பாராத விதமாக அருகிலிருந்த விவசாய நிலத்தில் ஆடு மேய்த்துக் கொண்டிருந்த திருமதி.முத்து லட்சமி என்பவரின் மகள் செல்வி.காயத்திரி (வயது 10) என்பவரின் தலையின் மீது விழுந்ததில் பலத்த காயமடைந்த சிறுமி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற துயரகரமான செய்தியைக் கேட்டு மிகவும் அதிர்ச்சியும் வேதனையும் அடைந்தேன்.

இந்தச் சம்பவத்தில் விபத்தில் உயிரிழந்த சிறுமி காயத்திரியின் பெற்றோருக்கும் அவரது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக்கொள்வதோடு, உயிரிழந்த சிறுமியின் குடும்பத்தினருக்கு மூன்று இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.




கரூர் மாவட்டம் அரவக்குறிச்சி பள்ளப்பட்டியில் இப்தார் நோன்பு திறக்கும் விழாவில் கரூர் மாவட்டக் கழகச் செயலாளர், மின்சாரம் மதுவிலக்கு ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் வி. செந்தில் பாலாஜி கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். பள்ளப்பட்டி நகர தி.மு.க சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டு, ஆசி மகாலில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் கழகத்தினர் மற்றும் பொதுமக்கள் பெரும் திரளாக கலந்து கொண்டனர்.

மாவட்டச் செயலாளர் பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ. தலைமையில்

# ஒன்றிய அரசைக் கண்டித்து இளைஞர் அணியின் சார்பில் பொதுக்கூட்டங்கள்!

## ஏ.கே.எஸ்.விஜயன் - உ.மதிவாணன் - நா.இளையராஜா பங்கேற்பு!

திருவாரூர், மார்ச் 26 -

ஒன்றிய பி.ஜே.பி.அரசின் கட்டாய இந்தித்திணிப்பு, நிதிப்பகிர்வில் பாரபட்சம், தொகுதி மறு சீரமைப்பில் அநீதி போன்ற ஜனநாயக விரோத செயல்பாடுகளை கண்டித்து, திருவாரூர் தொகுதியில் கூடூரிலும், திருத்துறைபூண்டி தொகுதியில் மடப்புரத்திலும் கழக இளைஞர் அணியின் சார்பில் கண்டனப் பொதுக்கூட்டங்கள் நடைபெற்றது.

மாவட்டச் செயலாளர் பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெற்ற இந்த பொதுக் கூட்டங்களில் தமிழ்நாடு அரசின் டெல்லி சிறப்பு பிரதிநிதி ஏ.கே.எஸ்.விஜயன், முன்னால் அமைச்சர் உ.மதிவாணன், மாநில இளைஞர் அணி துணை செயலாளர் நா.இளையராஜா, கழக செய்தி தொடர்பு செயலாளர் பேராசிரியர் கான்ஸ்டன்டைன் ரவீந்திரன், மாநில தகவல் தொழில்நுட்ப அணி துணை செயலாளர் மதுரை எஸ்.பாலா ,கழக இளம் பேச்சாளர்கள் தி.தினேஷ்பாபு, செல்வி.விக்னேஸ்வரி உள்ளிட்டோர் பங்கேற்று கண்டன உரையாற்றினார்.

மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் பணகுடி ஏ.எஸ்.குமார் வரவேற்புரையாற்றினார்.

கூட்டங்களில் மாவட்ட ஊராட்சி முன்னாள் தலைவர் தலையாமங்கலம் ஜி. பாலு, மாவட்ட அவைத் தலைவர் க.தன்ராஜ், மாவட்ட துணைச் செயலாளர்கள் எம்.எஸ்.கார்த்திக், எம்.ராமகிருஷ்ணன், சாந்தி பாஸ்கர், பொருளாளர் வெங்கடேசன், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் டி.செல்வம், த.கணபதி, ஆர்.எஸ்.பாண்டியன், ப.ஆடலரசன், ஒன்றிய செயலாளர்கள் புலிவலம் ஏ.தேவா, ஐ.வி.குமரேசன், ஆர்.பாலச்சந்தர், சேகர் கலிய பெருமாள்,நகர செயலாளர்கள் வாரை.எஸ். பிரகாஷ், எஸ்.வி.பக்கிரிசாமி, பேரூர் செயலாளர் பூண்டி. கே.கலைவேந்தன், வி.எஸ். ஆர். தேவதாஸ், பால.ஞானவேல், ப.பிரகாஷ், இரா. மனோகரன், பொதுக்குழு உறுப்பினர்கள் டி.செந்தில், கே.எஸ்.எஸ்.தியாகபாரி, செல்வ ஜெயதேவன், கலைவாணி மோகன், இளைஞர் அணி மாவட்ட துணை அமைப்பாளர்கள் சி.கே. எஸ். எழிலரசன், வி.கே. முருகானந்தம், எம்பி.எடிசன், எஸ்.கல்யாண சுந்தரம், வி.வினோத் குமார், பி.தாகிர் அலி, ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர்கள் என்.கே.சீரடி ராஜா, எஸ். ரஞ்சித்குமார், ஆர்.சி.ஏ. தினேஷ்,எம்.எஸ்.பிரகாஷ், ஜெ.ஜெகன் மணிராஜ், ஆர். வெங்கடேஷ் குமார், பாலா. பாலகுமார், கு.வெங்கடேசன் நகர இளைஞர் அணி அமைப்பாளர்கள் ஆர். கே.ராகுல், ரசின் பைசல் நா.புகழேந்தி, கோ.வசந்த், என்.தீன்முகம்மது மற்றும் துணை அமைப்பாளர்கள்,

மாவட்ட சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் வீரா.தேசபந்து, சோபா. கணேசன், என்கண்.சா. மணி, கலைவாணன், பிரபாகரன், எஸ்.இளங்கோவன், க.அன்பழகன், எஸ்.பகலவன், விமலாபாலு, ஆர்.நந்தகோபால், மீனாட்சி சூர்யபிரகாஷ், ஆர்.வி. ஆனந்த்,எஸ். மீனாட்சி,எம்.சதீஷ் குமார், எஸ்.விநாயகமூர்த்தி, எம். என்.ராஜா, பா.அரவிந்த், ராஜ். என்கிற கருணாநிதி, எம்.ஐ.ஆர்.தாஜுதீன், எஸ். திவாகரன், சுதந்திர குமார், வீ.அன்பழகன், கரிகாலன் மற்றும் துணை அமைப்பாளர்கள் பங்கேற்றனர்.

திராவிட நாயகர் தமிழ் நாடு முதல்வர் அவர்களின் வழிகாட்டுதல்களோடும், கழக இளைஞர் அணி செயலாளர் தமிழ்நாடு அரசின் துணை முதல்வர் உதயநிதி அவர்களின் ஆலோசனைப்படியும் நடைபெற்ற இந்த கண்டனப்பொதுக்கூட்டங்களில் மாநில ,மாவட்ட , ஒன்றிய நகர ,பேரூர் கழக நிர்வாகிகளும் வார்டு மற்றும் கிளைக்கழக நிர்வாகிகளும் , கழக தோழர்களும், அனைத்து சார்பு அணியினர்களும், இளைஞர்களும், தமிழார்வலர்களும், சமூக ஆர்வலர்களும் ,பொதுமக்களும் பெருமளவில் பங்கேற்றனர்.




ஒன்றிய அரசின் ஜனநாயக விரோதப் போக்கைக் கண்டித்து இளைஞர் அணியின் சார்பில் திருவாரூர் தொகுதி கூடூர் கலைஞர் திடலில் நடைபெற்ற கண்டன பொதுக்கூட்டத்தில் தலைமைக் கழக செய்தி தொடர்பு செயலாளர் முனைவர் கான்ஸ்டன்டைன் ரவீந்திரன் உரையாற்றினார். மாவட்டச் செயலாளர் பூண்டி.கே.கலைவாணன் எம்.எல்.ஏ. தலைமையில் முன்னாள் அமைச்சர், தாட்கோ தலைவர் உ.மதிவாணன், தொகுதி பொறுப்பாளர் எஸ்.கே.வேதரத்தினம்,மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர் நா.இளையராஜா, மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஏ.எஸ்.குமார், ஒன்றியச் செயலாளர்கள் புலிவலம் தேவா, ஆர். பாலச்சந்திரன், சேகர் கலியபெருமாள் ஐ.வி.குமரேசன், நகரக் கழகச் செயலாளர் வாரை.எஸ் பிரகாஷ், எஸ்.வி.பக்கிரி சாமி, கழக இளம் பேச்சாளர் தினேஷ் மற்றும் இளைஞர் அணி அமைப்பாளர்கள், பொது மக்கள் பங்கேற்றனர்.

